# தமிழ்நாடு தகவல் ஆணையம்

எண்.19, அரசு பண்ணை இல்லம். பேர்ன்பேட்டை, நந்தனம், சென்னை - 600 035
தொலைபேசி எண். 044 - 2951 5590

**ஆணை நாள் - 09.06.2025**

**முன்னிலை**

## திரு முகம்மது ஷகீல் அஃதர், இகாப (ஓய்வு)
## மாநில தலைமை தகவல் ஆணையர்

*****

**வழக்கு எண். SA 21373/SCIC/2022**

திரு.சொ. குமார்
எண். 05, வேம்புலி பண்ணைகாரன் தெரு ........ மேல்முறையீட்டாளர்
உள்ளகரம், சென்னை - 600 091.

//எதிர்//

பொதுத் தகவல் அலுவலர்/
தலைமையிடத்து துணை வட்டாட்சியர் ....... பொதுஅதிகார அமைப்பு
வட்டாட்சியர் அலுவலகம்
வண்டலூர் வட்டம், செங்கல்பட்டு மாவட்டம்

**ஆணை**

| | | |
|---|---|---|
| 1. | மனுதாரரின் தகவல் பெறும் உரிமைச் சட்ட மனு | 20.09.2022 |
| 2. | மனுதாரரின் முதல் மேல்முறையீட்டு மனு | 22.10.2022 |
| 3. | இரண்டாம் மேல்முறையீட்டு மனு | 05.12.2022 |
| 4. | ஆணையத்தின் அறிவிப்பு | 06.02.2023 |
| 5. | பின்னர் பொதுத் தகவல் அலுவலரின் பதில் | 29.09.2023 மற்றும் 17.12.2024 |
| 6. | மனுதாரரின் ஆட்சேபணை மனு | 20.02.2025 |

1. மனுதாரர், பொதுத் தகவல் அலுவலர் / தலைமையிடத்து துணை வட்டாட்சியர், வண்டலூர் வட்டம் அவர்களுக்கு அனுப்பிய மனுவில், கீழ்க்கண்டவாறு கோரியுள்ளார், “கிராம நிர்வாக அலுவலர், வருவாய் ஆய்வாளர், மண்டல துணை வட்டாட்சியர், தாசில்தார், கோட்டாட்சியர், மாவட்ட வருவாய் அலுவலர் மற்றும் மாவட்ட ஆட்சித் தலைவர் ஆகிய ஒவ்வொரு அலுவலரும் செய்ய வேண்டிய பணிகள் பட்டியலின் Job Card ஒளி நகல்” என்பன போன்று 13 (உட்பிரிவுகளுடன்-பதின்மூன்று) இனங்களில் தகவல்களை வழங்கக் கோரியுள்ளார்.

2. **இன்றைய (09/06/2025) விசாரணைக்கு மனுதாரர் ஆஜராகவில்லை. எவ்வித கடிதமும் மனுதாரரிடமிருந்து பெறப்படவில்லை. தமிழ்நாடு தகவல் ஆணையம் (மேல்முறையீட்டு விதிகள் 2012) விதி 7-ன்படி மனுதாரர் விசாரணைக்கு ஆஜராவது கட்டாயமாக்கப்பட்டுள்ளது. அன்னாரது வருகையின்மை பதிவு செய்யப்படுகிறது.பொது அதிகார அமைப்பின் சார்பில் திருமதி/செல்வி.மு.ஷாமிளா, தலைமையிடத்து துணை வட்டாட்சியர், வண்டலூர் வட்டம், செங்கல்பட்டு மாவட்டம் அவர்கள் ஆஜரானார். மனுதாரரின் 20/09/2022 தேதியிட்ட பிரிவு 6(1)-ன் கீழான மனுவிற்கு அப்போதைய (20/09/2022 தேதிய) பொதுத் தகவல் அலுவலர் திருமதி / செல்வி.புஷ்பராணி (தற்போது) மண்டல துணை வட்டாட்சியர், பல்லாவரம் வட்டம் அவர்கள் எவ்வித தகவலும் வழங்கவில்லை எனத் தெரிய வருகிறது. எனவே, மேற்குறிப்பிட்ட திருமதி / செல்வி.புஷ்பராணி என்பவர் மீது பிரிவு 20(1) மற்றும் பிரிவு 20(2)-ன் கீழ் ஏன் நடவடிக்கை எடுக்கக் கூடாது என்பதற்கான காரண விளக்கத்தை இவ்வாணை கிடைக்கப் பெற்ற 15 நாட்களுக்குள் தற்போதைய பொதுத் தகவல் அலுவலர் பெற்று அதனை ஆணையத்திற்கு அனுப்பி வைக்க வேண்டுமென்று ஆணையம் உத்தரவு பிறப்பிக்கின்றது.**

3. **இன்றைய விசாரணையின்போது, பொதுத் தகவல் அலுவலர், 29/09/2023 மற்றும் 17/12/2024 தேதிகளிட்டு ஆவணங்களின்படியான உரிய அரசு ஆணையினை இணைத்து மனுதாரருக்கு தகவல்களை அனுப்பியுள்ளதாகத் தெரிவித்தார். மனுதாரர், 20/02/2025 தேதியிட்டு தனது ஆட்சேபணை மனுவினை ஆணையத்திற்கு அனுப்பியுள்ளார். ஆணையத்தின் முன் உள்ள ஆவணங்களைப் பரிசீலனை செய்கையில், பொதுத் தகவல் அலுவலரால் அளிக்கப்பட்ட தகவல் ஆவணங்களின்படியான, உரிய தகவல் வழங்கப்பட்டுள்ளதாக ஆணையம் பதிவு செய்து, ஏற்கிறது. ஆணையத்தின் அழைப்பாணை அனுப்பப்பட்டு, நேரடி விசாரணையில் பங்கேற்று தனது வாதுரையினை பதிவு செய்ய வாய்ப்பளிக்கப்பட்டும், இன்றைய விசாரணையில் மனுதாரர் ஆஜராகவில்லை. எனவே, இவ்விரண்டாம் மேல்முறையீட்டு மனுவின் மீதான வழக்கின் விசாரணை இத்துடன் முற்றாக்கம் செய்யப்படுகிறது.**

**ஒம்./-(முகம்மது ஷகீல் அ ்தர்)**
**மாநில தலைமை தகவல் ஆணையர்**

**//ஆணைப்படி//**

**உதவி பதிவாளர்**

**<u>வழக்கு எண். SA 21373/SCIC/2022</u>**

**பெறுநர்**

**பொதுஅதிகார அமைப்பு**

பொதுத் தகவல் அலுவலர்/
தலைமையிடத்து துணை வட்டாட்சியர்
வட்டாட்சியர் அலுவலகம்
வண்டலூர் வட்டம், செங்கல்பட்டு மாவட்டம்.

2. திருமதி.புஷ்பராணி
முன்னாள் பொதுத் தகவல் அலுவலர்/
தலைமையிடத்து துணை வட்டாட்சியர்
(தற்போது) மண்டல துணை வட்டாட்சியர்
பல்லாவரம் வட்டம், செங்கல்பட்டு மாவட்டம்

**மேல்முறையீட்டாளர்**

திரு.சொ. குமார்
எண். 05, வேம்புலி பண்ணைகாரன் தெரு
உள்ளகரம், சென்னை - 600 091.

நகல்

1.மாவட்ட ஆட்சித் தலைவர்
மாவட்ட ஆட்சித் தலைவர் அலுவலகம்
செங்கல்பட்டு மாவட்டம்.

2.பதிவாளர்
தமிழ்நாடு தகவல் ஆணையம்
நந்தனம், சென்னை-600 035.

RG/PC